Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 1 (2018), Pages 64-73 / ISSN: eISSN 2590-3691

# பள்ளிகளில் பயிற்சி ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

# CHALLENGES FACED BY PRACTICAL TEACHERS IN SCHOOL

**பார்வதி முனியப்பன் [1] / Parvathy Muniappan [1]**
[1] கெடா, மலேசியா. / Kedah, Malaysia.
*மின்னஞ்சல்* / Email: parushaan@gmail.com

**Abstract**

Abstract The practical teachers who have finished their practical have faced many challenges during their practical. Thus, the researcher has conducted this research in order to identify the challenges the practical teachers faced and the methods they used to overcome the challenges. The respondents of this research are 25 practical teachers who have completed their practical. It has been carried out among the students of Sultan Idris Educational University. The information for this research has been collected through open-ended questionnaire. There were four questions which required the students who have finished practical to answer. The students also shared some knowledge and information related to practical. Time allocation for the lesson, school students' discipline, workload and assisting teacher are a few aspects that have caused challenges to the practical teachers. There are methods to overcome the challenges caused by time allocation for the lesson, student' discipline and assisting teacher. However, the workload that the practical teacher had to undergo is not solved as it might affect their marks.

**Keywords**: Practical, Challenges, Lesson Plan, Time Table, Assisting Teacher

**ஆய்வுச் சாரம்**

பயிற்றுப்பணியை முடித்த பயிற்சி ஆசிரியர்கள் பள்ளியில் பல சவால்களை எதிர்நோக்கியுள்ளனர். ஆகையால், ஆய்வாளர் அவர்கள் எதிர்நோக்கிய சவால்களையும் அதனை எவ்வாறு தீர்வுக் கண்டனர் என்பதை இவ்வாய்வில் குறிப்பிட்டுள்ளார். ஆய்வாளர் பயிற்றுப்பணியை முடித்த 25 பயிற்சி ஆசிரியர்களை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். இந்த ஆய்வு சுல்தன் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம் மாணவர்களிடையே நடத்தப்பட்டது. ஆய்வாளர் ஆய்வுக்குத் தேவையான தகவல்களைக் கருத்தறிவினாவின்வழி திரட்டினார்.

கருத்தறிவினாவில் பண்புசார் முறையில் தகவல்கள் சேகரிக்கப்பட்டது. கருத்தறிவினாவில் நான்கு கேள்விகள் முன்வைக்கப்பட்டது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களும் பயிற்றுப்பணி சார்ந்து சில கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர். பாட நேரம், மாணவர்களின் கட்டொழுங்கு, வேலை பழு மற்றும் வழிகாட்டி ஆசிரியர் யாவும் பயிற்சி ஆசிரியர்களுக்குச் சவால்களாக அமைகின்றன. பாட நேரம், மாணவர்களின் கட்டொழுங்கு, வழிகாட்டி ஆசிரியர் போன்ற சவால்களுக்குத் தீர்வு காண முடிந்தது. ஆனால், பயிற்சி ஆசிரியர்களின் வேலை பழுக்குத் தீர்வு காண முடியவில்லை என்னென்றால் அவர்களின் மதிப்பெண்கள் பாதிக்கப்படும். எனவே, நன்கு திட்டமிடலோடு கற்றுக் கொள்ள வேண்டும் என்ற வேட்கையே பயிற்றுப்பணியை வெற்றிகரமாக மாற்றுவதற்கான ஆதாரம் என்ற கருத்து வழுப்பெற்றுள்ளது.

***கருச்சொற்கள்:*** பயிற்றுப்பணி, சவால்கள், பாட திட்டம், கால அட்டவணை, வழிகாட்டி ஆசிரியர்

***முன்னுரை***

ஆசிரியர் இளங்கலைப்பட்ட படிப்பு முழுமை அடைய பயிற்றுப்பணி ஒரு முக்கியப் பயிற்சியாகும். ஆசிரியராகத் திகழ்வதற்கு முன்பு பயிற்றுப்பணி மேற்கொள்வது மிகவும் முக்கியமான ஓர் அங்கமாக விளங்குகிறது. பல்கலைக்கழக படிப்பின் போது ஏழாம் பருவத்தில் பயிற்றுப்பணி மேற்கொள்ளும் பருவமாக அமைகிறது. 16 வாரங்கள் சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழக (உப்சி) மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளியில் பயிற்சி ஆசிரியராகப் பணிப்புரிவது பல்கலைக்கழக விதிமுறையில் கட்டாயமானதாகும் (Buku Panduan Praktikum UPSI, 2017)[1].

பயிற்றுப்பணி மேற்கொள்ளும்போது பயிற்சி ஆசிரியருக்கு விரிவுரையாளர் ஒருவர் நெறியாளராக நியமிக்கப்படுவார். அதேவேளையில் பள்ளிலும் அவருக்கு வழிகாட்டி ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுப் பயிற்சி ஆசிரியர்களை ஆசிரியர் பணிக்கு உருவாக்குவர். நெறியாளர் பயிற்றுப்பணியை மேற்கொள்ளும் மாணவர்களை இரு முறை பள்ளிக்கு வந்து பயிற்சி ஆசிரியரின் போதனையை கண்காணிப்பர். வழிகாட்டி ஆசிரியர் அவர்களை நான்கு முறை வகுப்பில் கண்காணிப்பர். பயிற்சி ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மதிப்பிட இந்தக் கண்காணிப்பு நடத்தப்படுகிறது. பயிற்றுப்பணியின், 95 விழுக்காடு புள்ளிகள் பயிற்சி ஆசிரியர் வகுப்பில் கற்பிக்கும் விதத்திற்கும் 5 விழுக்காடு புள்ளிகள் புறப்பாட நடவடிக்கை பங்கேற்பிற்கும் வழங்கப்படுகின்றன. வகுப்பில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மட்டும் மேற்கொள்ளாது புறப்பாட நடவடிக்கையிலும் கலந்து கொள்ள வேண்டும் என்பது பல்கலைக்கழகத்தின் எதிர்ப்பார்ப்பு. பள்ளிகளில் பயிற்றுப்பணி மேற்கொள்ளும் பயிற்சி ஆசிரியர்கள் அங்கு சில சவால்களையும் எதிர்நோக்குகின்றனர்.

**ஆய்வுச் சிக்கல்**

உப்சி மாணவர்கள் நான்கு மாதங்கள் பயிற்றுப்பணியை மேற்கொள்வது கட்டாயமான ஒன்றாகும். அப்போது அவர்கள் பல சவால்களை எதிர்கொண்டு பயிற்றுப்பணியை முடிக்கின்றனர். பள்ளி நிர்வாகச் சிக்கல், நேரம் பற்றாக்குறை, பள்ளி மாணவர்களின் கட்டொழுங்கு சிக்கல், வழிகாட்டி ஆசிரியரின் வழிகாட்டின்மை முதலான சிக்கல்களைக் கண்டறிய இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இந்த மாதிரியான சிக்கல்களைப் பயிற்சி ஆசிரியர் எதிர்நோக்கும்போது அவர்களின் பயிற்றுப்பணி முழுமை அடையவில்லை என்ற மனநிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இந்தச் சிக்கல்களைக் கண்டறியவே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்படும் சவால்கள் சம்மந்தப்பட்ட தரப்பினரின் பார்வைக்குக் எடுத்துச் செல்லப்படும்.

**ஆய்வு நோக்கம்**

நான்கு மாதங்கள் பள்ளியில் பயிற்சி ஆசிரியராகப் பணிப்புரியும்போது என்னென்ன சவால்களை எதிர்நோக்கி உள்ளனர் என்பதையும் அதை *அவர்கள்* எவ்வாறு தீர்வுக் கணடனர் *என்பதனை* அறிந்து கொள்ளவும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வு எல்லை**

ஆய்வாளர் இந்த *ஆய்வு* 2016 வருடத்தில் *முடித்த* உப்சி மாணவர்களிடையே மேற்கொண்டார். இந்த ஆய்வில் பயிற்றுப்பணியை முடித்த 25 இந்திய பயிற்சி ஆசிரியர்களை உட்படுத்தப்பட்டனர். மேலும், இடைநிலைப்பள்ளியில் பயிற்றுப்பணியை மேற்கொண்ட மாணவர்களிடம் ஆய்வு நடத்தப்பட்டனர்.

**முந்தைய ஆய்வுகள்**

முந்தைய ஆய்வுகள் தொடர்பான தகவல்கள் ஆராயப்பட்டுள்ளன. முந்தைய ஆய்வுகள் ஆய்வாளரின் வழிகாட்டியாக அமைந்தது.

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழத்தில் நோர் அசிமா பிந்தி (2010) (Nor Asimah, 2010)[2] அவர்களால் வழிகாட்டி ஆசிரியர்கள் உப்சி பயிற்சி மாணவர்களுக்கு ஒரு

வழிகாட்டி எனும் தலைப்பில் ஆய்வை மேற்கொண்டுள்ளார். ஆய்வாளர் இந்த ஆய்வை மலாய் மொழியில் மேற்கொண்டார். ஆய்வாளர் 89 பயிற்சி ஆசிரியர்களை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். இந்த ஆய்வு 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து, மலேசிய அறிவியல் பல்கலைக்கழகத்தில் அப்துல் ரசிட் முகமட் மற்றும் சுரிடா இஸ்மாயில் (2010) (Adbul Rashid & Zuraida Ismail, 2010)[3] அவர்களால் பயிற்சி ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தலின் அனுபவம் எனும் தலைப்பில் ஆய்வை மேற்கொண்டனர். 42 பயிற்சி ஆசிரியர்களை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 6 பயிற்சி ஆசிரியர்களை ஆய்வாளர் நேர்காணல் செய்தனர்.

அதேபோல, மலேசிய அறிவியல் பல்கலைக்கழகத்திலும் பயிற்சி ஆசிரியர்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வை மேற்கொண்டனர். நோர் ஷாஃப்ரின் அஹ்மத், நோர் ஷப்ரின் அமாட், பட்ஷிளர் அம்சாப் மற்றும் இராஹிமின் சேஅமான் (2009) (Nor Shafrin Ahmad, Fadzilah Amzah & Rahimin Che Aman, 2009)[4], அவர்களால் மலேசிய அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி ஆசிரியர்களின் தகவல் தொடர்புத் திறன் எனும் தலைப்பில் மூவர் இந்த ஆய்வை மேற்கொண்டனர். 12 பயிற்சி ஆசிரியர்களை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த ஆய்வு 2009 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், யாயா புந்தாட் மற்றும் நோராயா ஓமார் (2011) (Yahya Buntat & Norhaya Omar, 2011)[5] 2007 / 2008 இல் வாழ்வியல் கல்வி பயிற்சி ஆசிரியர்களாகப் பள்ளிக்குச் சென்றவர்களின் சவால்கள் என்ற தலைப்பில் ஆய்வை மேற்கொண்டார். 125 பயிற்சி ஆசிரியர்களை ஆய்வுக்கு உட்படுத்தினர். ஆய்வாளர் ஆய்வை 2011 ஆம் ஆண்டில் மேற்கொண்டார். இந்த ஆய்விற்குக் கருத்தறிவினாவின்வழி கருத்துகள் திரட்டப்பட்டன.

**ஆய்வு முறைமை**

ஆய்வாளர் பயிற்றுப்பணியை முடித்த 25 இந்திய பயிற்சி ஆசிரியர்களை ஆய்வுக்கு உட்படுத்தினார். பயிற்சி ஆசிரியர்கள் பயிற்றுப்பணியின்போது எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் அதற்கு எவ்வாறு தீர்வுக் கண்டனர் என்பதைக் கருத்தறிவினாவில் கேள்விகளாகக் கேட்கப்பட்டது. அதன்வழி தகவல்கள் சேகரிக்கப்பட்டது.

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 1 (2018), Pages 64-73 / ISSN: eISSN 2590-3691


**கருத்தறிவினா**

கருத்தறிவினாவில் பண்புசார் முறையில் தகவல்கள் சேகரிக்கப்பட்டது.

***ஆய்வு கலந்துரையாடல்***

**பாலினம்**

முதல் கேள்வியானது பாலினம் சார்ந்தவை ஆகும். 2 ஆண்களும், 23 பெண்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். கீழ்காணும் வட்டக்குறிவரைவில் காணலாம்.





குறிவரைவு 1: பாலினம் எண்ணிக்கை

இந்த ஆய்வில் 92 விழுக்காடு பெண்களும், 8 விழுக்காடு ஆண்களும் உட்படுத்தப்பட்டனர்.

**பயிற்றுப்பணியில் கிடைத்த அடைவுநிலை**

இரண்டாவது கேள்வியாக ஆய்வாளர் பயிற்சி ஆசிரியர்களுக்குப் பயிற்றுப்பணியில் கிடைத்த அடைநிலை குறித்துக் கேட்டார். ஆய்வாளர் குறிவரைவில் பயிற்சி ஆசிரியர்களின் அடைவுநிலையைப் பிரித்துக் காட்டியுள்ளார்.




குறிவரைவு 2: பயிற்சி ஆசிரியர்களின் அடைவுநிலை எண்ணிக்கை

இந்த ஆய்வில் உட்படுத்தப்பட்ட 5 பயிற்சி ஆசிரியர்கள் A அடைவுநிலையையும், 10 பயிற்சி ஆசிரியர்கள் A- அடைவுநிலையையும், 6 பயிற்சி ஆசிரியர்கள் B+ அடைவுநிலையையும், 4 பயிற்சி ஆசிரியர்கள் B அடைவுநிலையையும் பெற்றுள்ளனர். சில பயிற்சி ஆசிரியர்கள் குறைவான அடைவுநிலையைப் பெறுவதற்கு *அவர்கள் சந்தித்த* சவால்களும் ஒரு காரணமாக அமைகின்றது.

**பயிற்றுப்பணியின்போது கற்பித்த பாடங்கள்**

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பயிற்சி ஆசிரியர் ஒன்றுக்கும் மேற்பட்ட பாடங்களைப் பள்ளியில் கற்பித்து உள்ளனர். தமிழ்மொழி, நன்னெறிக் கல்வி, தமிழ் இலக்கியம், ஆங்கிலம், மலாய் மொழி, வரலாறு, பூகோலம், கணிதம், தொழில் நுட்பம், புதுமுக வகுப்பு மலாய்மொழி, வர்த்தகவியியல், உடல் நலக்கல்வி போன்ற பாடங்களைக் கற்பித்தனர்.

**பயிற்றுப்பணியின்போது பயிற்சி ஆசிரியர்கள் எதிர்நோக்கிய சவால்களும் தீர்வுகளும்**

நான்காவது கேள்வியானது பயிற்சி ஆசிரியர்கள் பயிற்றுப்பணியின்போது எதிர்நோக்கிய சவால்களும் அதற்கான தீர்வுகளுமாகும். ஆய்வாளர் இந்தக் கேள்வியில் நான்கு வகை

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 1 (2018), Pages 64-73 / ISSN: eISSN 2590-3691

சவால்களாகப் பிரித்துள்ளனர். அதாவது பாட நேரம், மாணவர்களின் கட்டொழுங்கு, வேலை பழு, வழிகாட்டி ஆசிரியர் என்று ஆய்வாளர் பிரித்துள்ளார்.

**அ. பாட நேரம்**

***சவால்கள்***

பள்ளியில் ஒரு பாட வேளைக்கு 30 நிமிடங்களிலிருந்து 40 நிமிடங்கள் வரையிலும், இரு பாட வேளைக்கு 60 நிமிடங்களிலிருந்து 80 நிமிடங்கள் வரையிலும், 90 நிமிடங்களிலிருந்து 120 நிமிடங்கள் வரையிலும் ஒதுப்பட்டுள்ளது. எவ்வேளையில் மாணவர்கள் சபை கூடுதல் முடிந்தும், ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்பிற்கு மாறும்போதும், ஓய்வு நேரம் முடிந்தும், உடல் நலக்கல்வி முடிந்து வரும்போதும் தாமதமாக வகுப்பிற்கு நுழைகின்றனர். ஆகையால், பயிற்சி ஆசிரியர்களால் பாடத் திட்டத்திற்கு ஏற்றவாறு பாடத்தைக் கற்பிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. சில சமயங்களில் அவர்களால் திட்டமிட்ட பிடிகை அல்லது நடவடிக்கைகள் நடத்த முடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

**தீர்வுகள்**

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பயிற்சி ஆசிரியர்கள் தாமதமாக வகுப்பிற்கு வரும் மாணவர்களுக்குத் தண்டனை எனும் பெயரில் பாடத்திற்கு ஏற்ற கூடுதல் பயிற்சிகளை வழங்குதல், பாடங்களை மனனம் செய்து சொல்லுதல் போன்ற நடவடிக்கைகளைச் செய்தனர். மேலும், அவர்கள் மாணவர்களுக்கு அறிவுரை கூறிதல், கட்டொழுங்கு ஆசிரியரிடம் கூறி தாமதமாக வகுப்பிற்கு வரும் மாணவர்களுக்கு ஒரு தீர்வைக் கண்டனர்.

**ஆ. மாணவர்களின் கட்டொழுங்கு**

***சவால்கள்***

மாணவர்களின் கட்டொழுங்கு பிரச்சனை பயிற்சி ஆசிரியர்களுக்குப் பெரும் சவாலாகவே அமைந்தது. வகுப்பில் பயிற்சி ஆசிரியர்கள் கற்பிக்கும்போது மாணவர்கள் சத்தம் போடுதல், பயிற்சி ஆசிரியர்களைக் கேலி செய்தல், வீட்டுப்பாடங்களைச் செய்வதில்லை, பயிற்சி புத்தகங்களை வகுப்பிற்கு எடுத்து வராது போன்றவை ஆகும்.

**தீர்வுகள்**

பயிற்சி ஆசிரியர்கள் வகுப்பிற்கு வழிகாட்டி ஆசிரியர் அல்லது கட்டொழுங்கு ஆசிரியரையும் அழைத்துச் செல்லுதல், முதல் நிலை, இடை நிலை மற்றும் கடை நிலை மாணவர்களைக் கலந்து ஒரு குழுவில் உட்கார வைத்தல், அறிவுரை கூறுதல், கட்டொழுங்கு ஆசிரியரிடம் புகார் செய்தல் போன்ற தீர்வுகளைக் கண்டனர்.

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 1 (2018), Pages 64-73 / ISSN: eISSN 2590-3691

**இ. வேலை பழு**

**சவால்கள்**

பயிற்சி ஆசிரியர் என்பதால் பள்ளி நிர்வாகம் மற்றும் ஆசிரியர்கள் அதிகமான வேலைகளைக் கொடுக்கின்றனர். பயிற்சி ஆசிரியர்கள் நிறைய கற்றுக் கொள்ள வேண்டும் எனும் எண்ணத்தில் வேலைகளைக் கொடுக்கினறனர். பயிற்சி ஆசிரியர்கள் தேர்வுத்தாள் செய்தல், சுவரில் வரைதல், கட்டொழுங்கு பிரச்சனை உள்ள மாணவர்களுக்கு நிகழ்ச்சி செய்தல் போன்ற வேலைகளைப் பயிற்சி ஆசிரியர்களின் பொறுப்பாக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாது, ஆசிரியர்கள் வேலை பழுவைக் காரணம் காட்டி பயிற்சி ஆசிரியர்களை அவர்களின் வகுப்பை நடத்த சொல்லுதல்.

**தீர்வுகள்**

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பயிற்சி ஆசிரியர்கள் வேலை பழுக்கு எந்தவொரு தீர்வையும் காணவில்லை என்னென்றால் அவர்களின் மதிப்பெண்கள் பாதிக்கப்படும் என்ற எண்ணத்தில் கொடுக்கப்பட்ட பணிகளைச் செய்து முடித்தனர். அதேவேளையில் பல்கலைக்கழக விரிவுரையாளரின் பார்வைக்கு இந்தச் சிக்கல்கள் கொண்டு செல்லப்பட்டுச் சிலவற்றிக்குத் தீர்வு காணப்பட்டன.

**ஈ. வழிகாட்டி ஆசிரியர்**

**சவால்கள்**

வழிகாட்டி ஆசிரியர்கள் பயிற்சி ஆசிரியர்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்க வேண்டும். ஆனால், சில வழிகாட்டி ஆசிரியர்களின் வேலை பழுவின் காரணத்தால் பயிற்சி ஆசிரியர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்க முடியவில்லை. மேலும், வழிகாட்டி ஆசிரியர் பள்ளியில் இல்லாத சமயங்களில் பயிற்சி ஆசிரியர்கள் அவர்களின் வகுப்பை நடத்த வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அதுமட்டுமல்லது, வழிகாட்டி ஆசிரியர்களுக்குப் பயிற்சி ஆசிரியர்களுக்குப் புள்ளிகள் கொடுப்பதில் குழப்பங்கள் ஏற்படுகின்றது.

இதனை அடுத்து, வழிகாட்டி ஆசிரியரின் எதிர்பார்ப்பும் நெறியாளரின் எதிர்பார்ப்பும் அதிக வேறுப்பாடாக இருந்ததால் அவர்களுக்கேற்றவாறு பயிற்சி ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலை நடத்தினார்கள். வழிகாட்டி ஆசிரியர் எதிர்பார்க்கும் வகையில் கற்றல் கற்பித்தல் நடத்தப்படவில்லை என்றால் பயிற்சி ஆசிரியர்களின் மதிப்பெண்களைக் குறைக்கின்றனர். இதனால், இருவர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றது.

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 1 (2018), Pages 64-73 / ISSN: eISSN 2590-3691

**தீர்வுகள்**

வழிகாட்டி ஆசிரியரின் ஆலோசனைகள் பின்பற்றப்பட்டன.

**பொதுக் கருத்துகள்**

பொதுக் கருத்துகள் பிரிவில் பயிற்சி ஆசிரியர் சில கருத்துகளை முன் வைத்தனர். அவற்றுள் ஒன்றாக வழிகாட்டி ஆசிரியர்களுக்குக் கருத்தரங்கு ஒன்று நடத்த வேண்டும். வழிகாட்டி ஆசிரியர்கள் எவ்வாறு பயிற்சி ஆசிரியர்களை வழிகாட்ட வேண்டும், எவ்வாறு புள்ளிகளைக் கொடுக்க வேண்டும் என்ற விபரங்களைக் கருத்தறங்கில் சொல்லித் தர வேண்டும்.

ஒரு பள்ளிக்கு ஒரே துறை மாணவர்கள் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்னென்றால் அவர்களிடையே அடைவுநிலை வேறுபடுகின்றது. இதனால், அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றது. மேலும், பயிற்றுப்பணியை இரு முறைகள் வைத்தல் இன்னும் பல அனுபவங்கள் கிடைக்கும் என்று பயிற்சி ஆசிரியர்கள் முன்வைத்தனர்.

தொடர்ந்து, பயிற்சி ஆசிரியர்களுக்குத் தங்கும் வசதிகளை ஏற்படுத்தி தந்தால் சிறப்பாக இருக்கும் என்றும் பயிற்சி ஆசிரியர் கருதுகின்றனர்.

**முடிவுரை**

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பயிற்சி ஆசிரியர்களின் சவால்களும் அதனை எவ்வாறு தீர்வுக் கண்டனர் என்பதைப் பற்றி ஆய்வில் குறிப்பிட்டுள்ளது. ஆகையால், பயிற்றுப்பணிக்குச் செல்லவிற்கும் மாணவர்களுக்கு இந்த ஆய்வு பெரும் உதவியாக இருக்கும். மேலும், அவர்களுக்கு இது போன்ற சவால்களுக்கு எவ்வாறு தீர்வுக் காணலாம் என்று இப்பொழுதே சிந்திக்க முடியும்.

**மேற்கோள் நூல்கள்:**

1. *UPSI practicum guide book (Buku Panduan Praktikum UPSI)*. (2017). Tanjung Malim: Sultan Idris Education University.
2. Nor Asimah. (2010). *Effectiveness of Instructor's Guide to teacher training of UPSI trainers* (*Keberkesanan bimbingan guru pembimbing terhadap latihan mengajar guru pelatih UPSI.* In: International Conference on Teacher Education, 8-10 Nov 2010.

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 1 (2018), Pages 64-73 / ISSN: eISSN 2590-3691

3. Abdul Rashid Mohamed, Zurida Ismail. (2010). Pengalaman Belajar - Mengajar Guru Guru Pelatih Universiti Sains Malaysia: *Jurnal Pendidik dan pendidikan, Jilid 17*, 2010/2011.
4. Nor Shafrin Ahmad, Fadzilah Amzah & Rahimi Che Aman. (2009). *Kemahiran komunikasi guru pelatih Universiti Sains Malaysia*. Jurnal Pendidik dan Pendidikan. Jld.24, 125-142
5. Yahya Buntat & Norhaya Omar. (2011). *Cabaran guru-guru pelatih tahun Sarjana Muda Teknologi serta pendidikan (Kemahiran Hidup) sesi 2007/2008 terhadap latihan mengajar yang telah mereka lalui.* Pages 92-109 / ISSN 2231-7376.

MJSSH
Muallim Journal of
Social Science and Humanities